ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**தொடர்பூட்டல் திணைக்களம்**
30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி : 2477424, 2477423, 2477418
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2019.03.21 |

## 2019 பெப்புருவரியில் பணவீக்கம் அதிகரித்தது

**முதன்மைப் பணவீக்கம்**

ஆண்டுக்கு ஆண்டுப் பணவீக்கம் : 2.4%

ஆண்டுச் சராசரிப் பணவீக்கம்: 1.7%

மாதாந்தச் சதவீத மாற்றம்: -0.5%

**மையப் பணவீக்கம்**

ஆண்டுக்கு ஆண்டுப் பணவீக்கம்: 5.5%

ஆண்டுச் சராசரிப் பணவீக்கம்: 3.0%

மாதாந்தச் சதவீத மாற்றம்: 0.8%

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (தேநுவிசு, 2013=100)[1] ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்பட்டவாறான முதன்மைப் பணவீக்கம் தளத்தாக்கத்தின் பிரதானமான காரணத்தினால் 2019 சனவரியின் 1.2 சதவீதத்திலிருந்து 2019 பெப்புருவரியில் 2.4 சதவீதமாக அதிகரித்தது. இதேவேளையில், ஆண்டுக்கு ஆண்டு உணவல்லாப் பணவீக்கமானது 2019 சனவரியின் 6.5 சதவீதத்திலிருந்து 2019 பெப்புருவரியில் 6.7 சதவீதத்திற்கு அதிகரித்திருந்த வேளையில், உணவுப் பணவீக்கமும் 2019 சனவரியின் -4.8 சதவீதத்திலிருந்து 2019 பெப்புருவரியில் -2.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.

ஆண்டுச் சராசரி அடிப்படையில் அளவிடப்படுகின்ற தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றமானது 2019 சனவரியின் 1.8 சதவீதத்திலிருந்து 2019 பெப்புருவரியில் 1.7 சதவீதத்திற்கு சிறிதளவால் குறைவடைந்தது.




மாதாந்த மாற்றங்களைக் கருத்திற்கொள்ளும் போது தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் மாற்றமானது, 2019 பெப்புருவரியில் -0.5 சதவீதமாகக் காணப்பட்டது. இதற்கு உணவு வகையிலுள்ள பொருட்களின் விலைகளின் குறைவே பிரதானமாக காரணமாவதோடு, இவ்வகையில் மரக்கறிகள், பச்சைமிளகாய்கள், அரிசி, தேங்காய்கள், தேசிக்காய்கள், பெரியவெங்காயம் மற்றும் வாழைப்பழம் என்பவை குறிப்பிடத்தக்களவு குறைவினைப் பதிவுசெய்தன. எவ்வாறாயினும், மாதாந்த அடிப்படையில் உணவல்லா வகையிலுள்ள பொருட்களின் விலைகள் அதிகரித்திருந்ததுடன் இவற்றுள், கல்வித் துணைவகை உயர்வான அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. மேலும், நலம், போக்குவரத்து, வெறியக்குடிவகைகள் மற்றும் புகையிலை;

[1] தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் (2013=100) தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

வீடமைப்பு, நீர், மின்சாரம், வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள் துணைவகைகள் மாதகாலப்பகுதியில் அதிகரிப்பினைப் பதிவுசெய்தன.

பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கமானது ஆண்டுக்கு ஆண்டு அடிப்படையில் 2019 சனவரியின் 5.1 சதவீதத்திலிருந்து 2019 பெப்புருவரியில் 5.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. இதேவேளையில், ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கமும் 2019 சனவரியின் 2.7 சதவீதத்திலிருந்து 2019 பெப்புருவரியில் 3.0 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவுகள்**

**தளம் : 2013 = 100**

| ஆண்டு | மாதம் | சுட்டெண் | | மாதாந்தச் சதவீத மாற்றம் | | ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம் | | ஆண்டுச் சராசரி சதவீத மாற்றம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) | தேநுவி சுட்டெண் | தேநுவிசு (மைய) |
| 2017 | சனவரி | 119.3 | 121.4 | 1.1 | 0.7 | 6.5 | 7.1 | 4.6 | 6.2 |
| | பெப்புருவரி | 119.9 | 122.0 | 0.5 | 0.5 | 8.2 | 7.1 | 5.1 | 6.4 |
| | மாச்சு | 119.5 | 122.3 | -0.3 | 0.2 | 8.6 | 7.0 | 5.6 | 6.6 |
| | ஏப்பிறல் | 121.0 | 122.5 | 1.3 | 0.2 | 8.4 | 5.9 | 6.0 | 6.6 |
| | மே | 121.8 | 123.0 | 0.7 | 0.4 | 7.1 | 4.7 | 6.1 | 6.4 |
| | யூன் | 123.4 | 123.1 | 1.3 | 0.1 | 6.3 | 4.1 | 6.1 | 6.1 |
| | யூலை | 122.4 | 122.9 | -0.8 | -0.2 | 6.3 | 4.2 | 6.2 | 5.9 |
| | ஓகத்து | 122.3 | 123.0 | -0.1 | 0.1 | 7.9 | 4.8 | 6.5 | 5.8 |
| | செத்தெம்பர் | 123.3 | 123.1 | 0.8 | 0.1 | 8.6 | 4.6 | 6.8 | 5.7 |
| | ஒத்தோபர் | 124.8 | 123.1 | 1.2 | 0.0 | 8.8 | 4.1 | 7.1 | 5.6 |
| | நவெம்பர் | 126.4 | 123.8 | 1.3 | 0.6 | 8.4 | 2.8 | 7.5 | 5.2 |
| | திசெம்பர் | 126.6 | 123.8 | 0.2 | 0.0 | 7.3 | 2.7 | 7.7 | 4.9 |
| 2018 | சனவரி | 125.8 | 123.9 | -0.6 | 0.1 | 5.4 | 2.1 | 7.6 | 4.5 |
| | பெப்புருவரி | 123.7 | 124.4 | -1.7 | 0.4 | 3.2 | 2.0 | 7.2 | 4.1 |
| | மாச்சு | 122.8 | 124.6 | -0.7 | 0.2 | 2.8 | 1.9 | 6.7 | 3.6 |
| | ஏப்பிறல் | 122.9 | 124.8 | 0.1 | 0.2 | 1.6 | 1.9 | 6.1 | 3.3 |
| | மே | 124.3 | 125.1 | 1.1 | 0.2 | 2.1 | 1.7 | 5.7 | 3.1 |
| | யூன் | 126.5 | 125.3 | 1.8 | 0.2 | 2.5 | 1.8 | 5.3 | 2.9 |
| | யூலை | 126.6 | 125.7 | 0.1 | 0.3 | 3.4 | 2.3 | 5.1 | 2.7 |
| | ஓகத்து | 125.4 | 126.3 | -0.9 | 0.5 | 2.5 | 2.7 | 4.7 | 2.5 |
| | செத்தெம்பர் | 124.4 | 126.9 | -0.8 | 0.5 | 0.9 | 3.1 | 4.0 | 2.4 |
| | ஒத்தோபர் | 124.9 | 127.3 | 0.4 | 0.3 | 0.1 | 3.4 | 3.3 | 2.4 |
| | நவெம்பர் | 127.7 | 127.6 | 2.2 | 0.2 | 1.0 | 3.1 | 2.7 | 2.4 |
| | திசெம்பர் | 127.1 | 127.6 | -0.5 | 0.0 | 0.4 | 3.1 | 2.1 | 2.4 |
| 2019 | சனவரி | 127.3 | 130.2 | 0.2 | 2.0 | 1.2 | 5.1 | 1.8 | 2.7 |
| | பெப்புருவரி | 126.7 | 131.3 | -0.5 | 0.8 | 2.4 | 5.5 | 1.7 | 3.0 |

மூலம்: தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்